Page No.
Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

S.T.C. No. 3566/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | அறிவழகன் |
| Father's Name | : | பூமிபாலகன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.07.2025 அன்று கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் ஆய்வாளர் பால கிருத்திகா, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களுடன் மதுவிலக்கு ரோந்து அலுவலாக பசுபதிபாளையம், திருமாநிலையூர், காந்திகிராமம் சென்று, ரெட்டிபாளையம்

டாஸ்மாக் அருகே மதுபானம் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்படி ரெட்டிபாளையம் டாஸ்மாக் அருகே ஒரு நபர் சாக்கு பையுடன் இருந்தவர் போலிசாரை கண்டவுடன் ஓட முயற்சித்தவரை பிடித்து விசரித்தபோது அவருடைய பெயர் மகாலிங்கம் என்றும் கூறினார். அவர் ஆஜர் எதிரிதான். பின்னர், அவர் வைத்திருந்த சாக்கு பையை சோதனை செய்தபோது, 180 ml Black pearl brandy 2 பாட்டில்கள், 650 ml King fisher Beer –1 பாட்டில் ஆகியவை இருந்தன. தனி நபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீ செய்யப்படுகிறது.** என்னுடன் சண்முகம் என்பவர் கையொப்பம் செய்தார். பின்னர் எதிரியை தடயப் பொருளுடன் நிலையம் கொண்டு வந்து நிலைய கு.எண்.1092/2024, ச.பி.4(1)(C) TNP ACT ன்படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் சம்பந்தமாக ரோந்துக்கு செல்லும்போது நான் காவல் அலுவலில் இருந்தேன். ரோந்து அலுவல் குறித்து காவலர் நாட் குறிப்பேட்டில் எழுதியுள்ளேனா எழுதியுள்ளேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது நாட்குறிப்பேட்டை கேட்டு பெற்று கொண்டாரா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எந்தந்த இடத்திற்கு எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சுமார் 09.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று 09.30 மணி வரைக்கும் சம்பவ இடத்தில் இருந்தோம். அந்த இடைப்பட்ட நேரத்தில் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால்

சரிதான். நாங்கள் சம்பவ இடத்தில் பொது மக்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மது பாட்டில்களில் அயல் நாட்டு மதுபானம் என எழுதப்பட்ட குறிப்பு இருந்ததா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் பெறப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் புள்ளி விவரக் கணக்கிற்காக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்./—எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்